முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் மஸ்தான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

16.10.2018, செவ்வாய்க்கிழமை

1. **கலியுகம் தன்னில் ஞானபலம்**
**கண்டு மக்கள் தேறவே**
**அழியாமை போதித்து உலகில்**
**ஆறுமுக அரங்க ஞானியாய் வந்த தேசிகனே**

2. தேசிகனே உன் பெருமை கூறி
தெரிவிப்பேன் ஒளி சூட்சும நூலை
ஆசிபட **விளம்பி தரிவை திங்கள்**
**அறிவிக்க முப்பான் திகதி குசன் வாரம்**
**(விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 30ம் நாள் 16.10.2018, செவ்வாய்க்கிழமை)**

3. **வாரமதில் மஸ்தான் யானும்**
வழங்கிடுவேன் உலகோர் நலம் பெற
சோரமிலா மக்களை காக்க
சுப்பிரமணியர் சக்தியாக வந்த

4. வந்தநல் அரங்கமகா ஞானியை
வணங்கி மக்கள் வருகவே
சிந்தை தெளிந்து குருவருள் வழி
சித்திகள் பெறுவர் உலக மக்கள்

5. மக்களின் வாழ்வாதாரமுடன்
மனவளத்தையும் காக்க வேண்டி
பக்குவமிக்க அருளுபதேசமுடன்
பரோபகார தருமமும் செய்து வர

6. வருகவே அரங்கன் ஆசியுடன்
வரங்களும் பெற்று மக்கள்
மாறுதலும் சகல வகை ஆறுதலும்
மகத்துவமும் கண்டு உயர்வர்

7. உயர்வான பதவி சுகமென
உண்மையான உறவுகள் துணைபட
தயவுடன் இல்லறம் நடத்தி
தக்க மனுதர்மம் மீறா வாழ்ந்து

8. வாழ்ந்து அரங்கன் சீடர்கள் என
வருபவர்கள் அனைத்து பேர்களும்
ஊழ் வென்று கலியுகம் தன்னில்
உயருவர் ஞானவான்களாவர்

9. ஆவரே அரங்கன் தொண்டர்
அகிலமெங்கும் சேவை ஆற்றும்
யுகராசர்களான சீடர்களே
உலகினில் ஞானிகள் ஆவர்

10. அவணியை அன்னதானமெனும்
அறச்சேவை கொண்டுமே
வகைபட அளவிட வந்த
வள்ளல் ஞானியரின் தருமமே

11. தருமமே மக்களை காக்கும்
தருமமே கலியிடரை போக்கும்
ஆறுமுக அரங்கனை ஏற்று வாரீர்
அரங்கன் பிரணவ குடிலுக்கு ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் மஸ்தான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

மாமாயை சூழ்ந்து அறியாமை மிகுந்துள்ள கலியுகத்தினில் அறியாமை எனும் இருளினைப் போக்கி மக்களுக்கு ஞானபலம் தந்து மக்களெல்லாம் கடைத்தேறிடவே நித்தியம் அநித்தியத்தினை உணர்ந்து அவர்களுக்கு அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை போதித்து அவர்களும் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள எளிமை, உண்மை, ஞானம்தனை அருளி முருகப்பெருமானின் அவதாரமாக ஞானகுருவாக வந்துதித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானயோகியே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் புரட்டாசி மாதம் 30ம் நாள் 16.10.2018, செவ்வாய்க்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே மஸ்தான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் மஸ்தான்சாகிப்.

கலியுகத்தின் பிடியினுள் சிக்கிய மக்களெல்லாம் வீண் போகாமல் காத்திடவே முருகப்பெருமானின் சக்தி வடிவமாக வந்துதித்திட்ட மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை மக்களெல்லாம் உளமார நம்பிக்கையோடு வணங்கி வரவர, வணங்கும் அவர்களது சிந்தை தெளிவடையும், அவர்களெல்லாம் குருவருளால் குருவின் மூலமாய் சித்திகளை பெற்று சிறப்படைவார்கள்.

மக்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திடவும் மக்களின் மனநலத்தை காத்திடவும் வேண்டி அவர்களுக்கு பக்குவமாய் அருளுபதேசங்களை அருளி காப்பதோடு பரோபகாரமாகிய ஜீவதயவு பெருகிடுமாறு தருமங்களையும் செய்து வர, ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் ஆசியுடன் வரங்களையும் பலவாறாய் மக்கள் பெற்று மக்கள் மாறுதலும் சகலவகையிலும் ஆறுதலும் பெற்று மகத்துவங்கள் பல கண்டு தேற்றம் அடைவார்கள், உயர்வடைவார்கள்.

உயர்வான பதவி சுகமுடன், உண்மையுள்ள உறவுகளின் துணையோடு தயவுமிக்க இல்லறமாய் இல்லறத்தினை நடத்தி மனுதர்மத்தை மீறாமல் வாழ்ந்து ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் சீடர்கள் எனும் பெருமைமிகு நிலையை அடைந்திடுவர்.

ஆறுமுக அரங்கனின் சீடர்களாய் உள்ள அனைத்துபேர்களும் ஊழ்வினையை வென்று கலியுகத்தினில் உயர்வடைவார்கள், ஞானவான்களாக ஆகி சிறப்படைவார்கள்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் அறத்தொண்டுகளை உலகமெங்கும் பரப்பி தொண்டுகள் செய்து வருகின்ற யுவராசர்களான சீடர்களே இனி வருங்காலம் உலகினில் ஞானிகளாக ஆகிடுவார்கள்.

இவ்வுலகினை அன்னதானம் என்கிற அறச்சேவையினால் அளவிட்டு அதை மாற்றி காக்கும் நோக்கில் அவதரித்த வள்ளல் ஞானி அரங்கமகா தேசிகர் செய்யும் தருமச் செயல்களே இவ்வுலக மக்களைக் காக்கும் தருமமே கலியுக துன்பத்தை போக்கும்.

ஆதலினால் ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை குருவாய் ஏற்று தவறாமல் வழிபட்டு ஆசி பெற்று வாருங்கள். அரங்க தரிசனம் பெற ஏழாம் படை வீடு ஓங்காரக்குடிலிற்கு வருகை தந்து, அரங்கரிடத்து உபதேசம் பெற்று ஜென்மத்தைக் கடைத்தேற்றிட உடன் விரைந்து வாரீர் வாரீர் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் மஸ்தான்.

–சுபம்–